**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்**

**முன்னிலை : திருமதி.அ.மலர்விழி, M.L.,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும்**
**அமர்வு நீதிபதி. தஞ்சாவூர்.**

**2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2053 – ஐப்பசித் திங்கள் 24 ஆம் நாள்)**
**அசல் வழக்கு எண் 37/2021ல் இடைநிலை மனு எண் 214/2022**

ஞானசேகரன் .............**மனுதாரர் /பிரதிவாதி**

**/எதிர்/**

கண்ணதாசன் ......**எதிர்மனுதாரர்/வாதி**

இம்மனு **2.11.2022** அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு. K.பன்னீர்செல்வம்** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.T.காமராஜ்** அவர்கள் முன்னிலையாகியும், வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், இம்மனுவை இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

(1) மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் 26.9.2022 தேதியில் பிறப்பிக்கப்பட்ட எதிரவரில்லா உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரரால் உ.வ.வி.மு.சட்டம் கட்டளை 9 விதி 7 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(2) மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தில், 26.9.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக வழக்கு போடப்பட்டிருந்ததாகவும், மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் வந்ததன் காரணமாக நீதிமனற்த்தில் மேற்படி வாய்தா தேதியன்று ஆஜராக முடியவில்லை என்றும், எனவே, மேற்படி தேதியில் எதிரவரில்லா உத்தரவு ஏற்பட்டதாகவும், மேற்படி தேதியில் ஆஜராகாதது மனுதாரருக்கு ஏற்பட்ட வைரஸ் காய்ச்சல் காரணத்தினாலேயே ஆகும் எனவும், எனவே, மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட எதிரவரில்லாத உத்தரவை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டுமெனவும் வாதிட்டுள்ளார்.

(3) எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தில், மனுதாரர்/பிரதிவாதி, வாதியை குறுக்கு விசாரணை செய்யாமல் வழக்கை தொடர்ந்து நடத்ததால் மனுதாரருக்கு எதிராக 26.9.2022 அன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டு வழக்கு வாதி தரப்பு சாட்சிய விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் ஒருதலைபட்சமாக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யவேண்டி மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர்/வாதியால் 10.8.2022 அன்று நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து 4 வாய்தாக்கள் ஆனபிறகும் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்மனுதாரர்/வாதியை குறுக்கு விசாரணை செய்யாமலும், 5 ஆவது வாய்தாவான 19.9.2022 அன்றும் வாதியை குறுக்கு விசாரணை செய்யாமல் காலம் கடத்திவந்த காரணத்தால் ரூ.500/- செலவுத்தொகையை எதிர்மனுதாரர்/வாதிக்கு மனுதாரர்/பிரதிவாதி

கொடுக்கவேண்டுமென உத்தரவிடப்பட்டிருந்ததாகவும், நீதிமன்ற உத்தரவை மதித்து செலவுத்தொகையை வழங்காத காரணத்திற்காக இந்த மனு தள்ளுபடி செய்ப்பட வேண்டிய ஒன்று எனவும் அதனைத்தொடர்ந்து அடுத்த வாய்தாவான 26.9.2022 அன்றும், மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆஜராகி எதிர்மனுதாரர்/வாதியை குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தினால் நீதிமன்றம் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்ததாகவும், மனுதாரர் தனக்கு 26.9.2022 அன்று வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என மனுவில் தெரிவித்துள்ளதாகவும், மனுதாரர் தனக்கு உடல்நிலை சரியில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் மருத்துவச்சான்று எதையும் தாக்கல் செய்யவில்லை எனவும், மனுதாரர் கடந்த 5 வாய்தாக்களாக நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்ததற்கும், குறுக்கு விசாரணை செய்யாமல் காலம் கடத்தியதற்கும் எந்தவித காரணமும் குறிப்பிட்டு சொல்லவில்லை எனவும், வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக எதிருரை தாக்கல் செய்வதிலும் குறுக்கு விசாரணை செய்வதிலும் வேண்டுமென்றே மனுதாரர் காலம் கடத்தி வருவதாகவும், மனுதாரர் /பிரதிவாதி உண்மைக்கு புறம்பான தகவல்களைத் தெரிவித்து ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்திருப்பது ஆட்சேபணைக்குரியதாகும் எனவும், எனவே மனுவை எதிர்மனுதாரர்/வாதியின் அதிகட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் வாதிட்டுள்ளார்.

(4) இருதரப்பு வாதங்களும் வழக்காவணங்களும் பரிசீலிக்கப்பட்டன. வா.சா.1ன் முதல் விசாரணை வாக்குமூலம் 10.8.2022 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

வா.சா.1 தொடர்ந்து நீதிமன்றத்தில் முன்னிலையாகியும், மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அவரை 22.8.2022, 2.9.2022 , 19.9.2022, 26.9,2022 ஆகிய தேதிகளில் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. மனுதாரர் தான் 26.10.2022 ஆம் தேதியன்று வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் சொல்லியுள்ள காரணம் மனுவில் தோதிற்காக சம்பிரதாயமாக சொல்லப்பட்ட காரணமாகவே அறிய முடிகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்டுள்ள வாதம் அனைத்தும் ஏற்கக்கூடியதாகவும், இம்மனுதாரர் வழக்கை தாமதப்படுத்தும் நோக்கிலேயே 22.8.2022 , 2.9.2022, 19.9.2022 ஆகிய தேதிகளில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் தாமதப்படுத்தியுள்ளார் என அறிய முடிகிறது. இருந்தபோதிலும், நீதியின் நலன்பால் இந்த மனுதாரருக்கு வழக்கை நடத்தவதற்கு நிபந்தனையின்பேரில் ஒரு வாய்ப்பளிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, மனுதாரர், எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத்தொகையாக ரூ.1500/-ஐ 18.11.2022 க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 21.11.2022

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, **2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

**(ஒ-ம்) அ. மலர்விழி**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு**
**நீதிபதி, தஞ்சாவூர்.**

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்  தரப்பு**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்- இல்லை**

**(ஒ-ம்) அ. மலர்விழி**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு**
**நீதிபதி, தஞ்சாவூர்.**

**உத்தரவு**

**அசல் வழக்கு எண். 37/2021ல் இடைநிலைமனு எண்.214/2022**

**நாள். 10.11.2022**

-